(ஆ) ஆம் எனில் அரசு அவர்களுக்கு வீடு கட்டித்தரும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் மூலம் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியருக்கு பணிக்கப்பட்டுள்ளது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளாபாளையம் கிராமத்தில் தீ பிடித்து ஓராண்டு காலமாகிறது. இப்பொழுதே, கிராமப்புற வீடு கட்டும் சங்கங்களில் ஏராளமான மனுக்கள் தேங்கியிருக்கின்றன. ஆகவே, அதை மாற்றி, தாட்கோ மூலம் அரசு வீடு கட்ட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அத்தகைய எண்ணம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிட்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

காவிரி நீர்ப் பிரச்சினை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்னையில் கர்நாடக மாநில முதல்வர் குண்டுராவ் குறிப்பிட்டது குறித்து.....

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அதைப் பற்றி நாளை மறுநாள் எடுத்துக் கொள்ளலாம்.

3. அறிவிப்பு

நிதி நிலை அறிக்கை அளிக்கப் பெறும் தேதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202 (1) மற்றும் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ் 1982–83-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை 26–2-1982 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்குச் சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளாரர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.